## PRIMARY 3 - WORKSHEETS (PAPER 2)

## தொடக்க நிலை 3 - பயிற்சிதாள்கள் (தாள் 2)

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 8 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 9 - 16 |
| 3 | தேர்வுத்தாள் 3 | 17 - 24 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 25 - 32 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 33 - 40 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 41 - 48 |
| 7 | தேர்வுத்தாள் 7 | 49 - 57 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 58 - 66 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 67 - 75 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 76 - 84 |
| 11 | தேர்வுத்தாள் 11 | 85 - 93 |
| 12 | தேர்வுத்தாள் 12 | 94 - 102 |
| 13 | அருஞ்சொற்பொருள் | 103 - 116 |
| 14 | விடைத்தாள் | 117 - 129 |


WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

## தேர்வுத்தாள் 1

45

### A1 மூவிடப்பெயரும் வினையும்

**Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q1. சகுந்தலா காட்டில் **கனிகளை**ப் பறிக்கச் ____________________.

(1) சென்றான் (3) சென்றாள்

(2) சென்றார் (4) செய்கிறேன் ( )

Q2. ____________________ **விலங்கியல்** தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தோம்.

(1) நீங்கள் (3) அவர்கள்

(2) நாங்கள் (4) மாணவர்கள் ( )

Q3. நரிகள் இறந்த மானைக் கடித்து ____________________.

(1) தின்கின்றது (3) தின்றது

(2) தின்றன (4) தின்றனர் ( )

Q4. ____________________ **மேடை**யில் ஏறிப் பேச பயந்தான்.

(1) அவள் (3) மாலதி

(2) அவர்கள் (4) பாலன் ( )

Q5. ஆசிரியர் பாடம் செய்யாத மாணவனைத் ____________________.

(1) திட்டினார் (3) திட்டுவார்

(2) திட்டினான் (4) திட்டினார்கள் ( )

WORDSMITH BEYOND LEARNING

## A2 செய்யுள்

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுளை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q6. உடையது ________________.

(1) விளையேல் (3) நினையேல்

(2) கைவிடேல் (4) விளம்பேல் ( )

Q7. ________________ செய விரும்பு.

(1) மறம் (3) நன்மை

(2) அறம் (4) தர்மம் ( )

Q8. இயல்வது ________________.

(1) கரவேல் (3) ஓதுக்கேல்

(2) பேசேல் (4) மறவேல் ( )

Q9. ________________ விலக்கேல்.

(1) பேசுவது (3) ஊக்கமது

(2) ஈவது (4) நல்லது ( )

Q10. ________________ சினம்.

(1) விரும்புவது (3) ஆறுவது

(2) ஓதுவது (4) ஈவது ( )

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

## A3 காலங்கள்

**Q11 முதல் Q15 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது. (5 மதிப்பெண்கள்)**

Q11. நேற்று அம்மா சந்தைக்குச் ________________.

(1) சென்றார்

(2) செல்கிறார்

(3) செல்வார் ( )

Q12. இப்போது நாய் பூனையைத் ________________.

(1) துரத்தியது

(2) துரத்துகிறது

(3) துரத்தும் ( )

Q13. நாளை மாமா என் வீட்டிற்கு ________________.

(1) வந்தார்

(2) வருகிறார்

(3) வருவார் ( )

Q14. சென்ற ஆண்டு நான் வேறொரு பள்ளியில் ________________.

(1) படித்தேன்

(2) படிக்கிறேன்

(3) படிப்பேன் ( )

Q15. அடுத்த வாரம் என் பள்ளியில் ஓட்டப்பந்தயம் ________________.

(1) நடைபெற்றது

(2) நடைபெறுகிறது

(3) நடைபெறும் ( )

## A4 அடைமொழி / எச்சம்

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான அடைமொழி / எச்சம் ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது. (5 மதிப்பெண்கள்)**

Q16. பூங்கா ______________ இருக்கிறது.

(1) கூட்டமாக

(2) கூட்டமான ( )

Q17. இது ஒரு ______________ கதை.

(1) வேடிக்கையான

(2) ருசியான ( )

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

Q18. நத்தை ______________ நகரும்.

(1) வேகமாக

(2) மெதுவாக ( )

Q19. நாம் நூலகத்தில் ______________ இருக்க வேண்டும்.

(1) அமைதியாக

(2) இரைச்சலாக ( )

Q20. குமார் தினமும் பள்ளிக்குச் ______________ சீருடையை அணிந்து வருவான்.

(1) சுத்தமாக

(2) சுத்தமான ( )

## A5 முன்னுணர்வுக் கருத்தறிதல்

**Q21 முதல் Q25 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அடைப்பினுள் எழுது. (5 மதிப்பெண்கள்)**

அன்று ராமுவும் அவன் நண்பர்களும் காற்பந்து விளையாடினார்கள். அவர்கள் போட்டி போட்டுக் கொண்டு காற்பந்து விளையாடினார்கள்.

அப்போது ராமு பந்தை Q21. ________ உதைத்தான். அந்தப் பந்து திரு.கோபாலின் வீட்டுச் சன்னல் Q22. ________ நொறுக்கியது. ராமுவும் அவன் நண்பர்களும் அதைக் கண்டு பயந்தார்கள். சத்தத்தைக் கேட்டுத் திரு.கோபால் Q23. ________ வெளியே ஓடி வந்தார். அவர் அனைவரையும் Q24. ________.

ராமுவும் அவன் நண்பர்களும் அவரிடம் Q25. ________ கேட்டார்கள். அதைக் கேட்ட திரு. கோபால் மனமிரங்கி அவர்களை மன்னித்து, “இனிமேல் கவனமாக விளையாடுங்கள்,” என்று அறிவுரை கூறிச் சென்றார்.

Q21. (        )

Q22. (        )

Q23. (        )

Q24. (        )

Q25. (        )

(1) திட்டினார்
(2) மன்னிப்பு
(3) வேகமாக
(4) வீட்டுக்கு
(5) கண்ணாடியை

## A6 சுயவிடைக் கருத்தறிதல்

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.**

திருமதி. கலா சிராங்கூன் வட்டாரத்தில் வசித்து வந்தார். ஒரு நாள் அவருடைய வீட்டில் ஒரு பெரிய எலி புகுந்து விட்டது. எலியின் **தொந்தரவு** தாங்க முடியாமல் அவர் கவலைப்பட்டார்.

மறுநாள் அவர் எலியைப் பிடிக்க ஒரு **பொறி**யையும் ஒரு வடையையும் வாங்கி வந்தார். அவர் பொறியில் தொங்கும் ஒரு வளையத்தில் வடைத் துண்டைச் **சொருகி** வைத்தார். வடையின் வாசத்தை முகர்ந்து வரும் எலி, அதை எடுக்க **முயலும்**போது பொறியில் சிக்கிக் கொள்ளும். அதன் பின் எலியின் தொல்லையே இருக்காது என்று அவர் நினைத்தார். பின், அவர் **உறங்க**ச் சென்றார்.

எலிக்கு வடையின் வாசனை மூக்கைத் **துளைத்தது**. அது கவனமாக வடை மாட்டியிருந்த கம்பியின் மீது குறி வைத்து கல்லை வீசியது. அதனால், வடை வெளியே விழுந்தது. உடனே எலி வடையைத் தூக்கிக் கொண்டு **மறைந்தது**.

WORDSMITH
BEYOND LEARNING
EQ Skills = Jump grades + achieve Big

**Q26 முதல் Q30 வரையிலுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடையைக் கண்டறிந்து எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q26. திருமதி. கலா **எங்கே குடி** இருந்தார்? (2 மதிப்பெண்கள்)

Q27. அவருடைய வீட்டில் **என்ன** **புகுந்து** விட்டது? (2 மதிப்பெண்கள்)

Q28. மறுநாள் அவர் **எவற்றை** வாங்கி வந்தார்? (2 மதிப்பெண்கள்)

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

Q29. **எப்போது** எலி பொறியில் சிக்கிக் கொள்ளும் என்று அவர் நினைத்தார்? (2 மதிப்பெண்கள்)

Q30. **எதனால்** வடை வெளியே விழுந்தது? (2 மதிப்பெண்கள்)

## *சிறப்புத் தேர்ச்சிக்கான பயிற்சிகள்*

## A7 வாக்கியம் அமைத்தல்

**Q31 முதல் Q35 வரையிலுள்ள சொல்லைக் கொண்டு வாக்கியம் அமைக்கவும். (5 மதிப்பெண்கள்)**

Q31. பயந்தது

Q32. துரத்தினான்

Q33. உயரமாக

Q34. அழகான

Q35. அன்பாக

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP grades + achieve Big

### *சிறப்புத் தேர்ச்சிக்கான பயிற்சிகள்*

## A7 கருத்து விரிவாக்கம்

**Q31 முதல் Q32 வரையிலுள்ள சொல்லைக் கொண்டு வாக்கியம் அமைக்கவும்.**

**(5 மதிப்பெண்கள்)**

| | | |
|---|---|---|
| (எ-கா.) | 1 | இது கடை. |
| | 2 | இது <u>புத்தகக்</u> கடை. |
| | 3 | இது <u>பெரிய</u> <u>புத்தகக்</u> கடை. |

| | | |
|---|---|---|
| Q31. | 1 | இது கடற்கரை. |
| | 2 | இது ____________ கடற்கரை. |
| | 3 | இது ____________ ____________ கடற்கரை. |

| | | |
|---|---|---|
| Q32. | 1 | இது தோட்டம். |
| | 2 | இது ____________ தோட்டம். |
| | 3 | இது ____________ ____________ தோட்டம். |

A8 கையெழுத்து

| | | | |
|---|---|---|---|
| ஸ் | ஸ் | ஸ் | ஸ் |

ஸ்ரீ பிரியா

WORDSMITH
BEYOND LEARNING

## அருஞ்சொற்பொருள்

### தேர்வுத்தாள் 1

| | சொல் | பொருள் |
|---|---|---|
| 1 | கனிகளை | பழங்களை (Fruits) |
| 2 | விலங்கியல் | மிருகக்காட்சி (Zoo) |
| 3 | மேடை | அரங்கம் (Stage) |
| 4 | ஆண்டு | வருடம் (Year) |
| 5 | சீருடை | Uniform |
| 6 | நொறுக்கியது | உடைத்தது / தூளாக்கியது (Shattered into pieces) |
| 7 | மனமிரங்கி | இரக்கப்பட்டு (Mercy) |
| 8 | அறிவுரை | ஆலோசனை / நல்ல கருத்து (Advice) |
| 9 | தொந்தரவு | தொல்லை (Disturb) |
| 10 | பொறி | எலி பிடிக்கும் கூண்டு (Mouse trap) |
| 11 | சொருகி | திணித்து (Insert) |
| 12 | முயலும் | முயற்சி (Try) |
| 13 | உறங்க | தூங்க (Sleep) |
| 14 | துளைத்தது | பிளந்தது (Pierced) |
| 15 | மறைந்தது | காணாமல் போனது (Disappeared) |
| 16 | குடி | வசித்து / தங்கி (Stay) |
| 17 | புகுந்து | நுழைந்து (Enter) |
| 18 | துரத்தினான் | விரட்டினான் (To chase) |

# சிகரம் P3 - தமிழ்த் தேர்வு பயிற்சித்தாள் - விடைகள்

## தேர்வுத்தாள் 1

| A1. மூவிடப்பெயரும் வினையும் | | A2. செய்யுள் | | A3. காலங்கள் | | A4. அடைமொழி/ எச்சம் | | A5. முன்னுணர்வுக் கருத்தறிதல் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Q1 | 3 | Q6 | 4 | Q11 | 1 | Q16 | 1 | Q21 | 3 |
| Q2 | 2 | Q7 | 2 | Q12 | 2 | Q17 | 1 | Q22 | 5 |
| Q3 | 2 | Q8 | 1 | Q13 | 3 | Q18 | 2 | Q23 | 4 |
| Q4 | 4 | Q9 | 2 | Q14 | 1 | Q19 | 1 | Q24 | 1 |
| Q5 | 1 | Q10 | 3 | Q15 | 3 | Q20 | 2 | Q25 | 2 |

| A6 | சுயவிடைக் கருத்தறிதல் |
|---|---|
| Q26 | திருமதி. கலா சிராங்கூன் வட்டாரத்தில் குடி இருந்தார். |
| Q27 | அவருடைய வீட்டில் ஒரு பெரிய எலி புகுந்துவிட்டது. |
| Q28 | மறுநாள் அவர் எலியைப் பிடிக்க ஒரு பொறியையும் ஒரு வடையையும் வாங்கி வந்தார். |
| Q29 | வடையின் வாசத்தை முகர்ந்து வரும் எலி, அதை எடுக்க முயலும் போது பொறியில் சிக்கிக் கொள்ளும் என்று அவர் நினைத்தார். |
| Q30 | வடை மாட்டியிருந்த கம்பியின் மீது எலி குறி வைத்துக் கல்லை வீசியதால் வடை வெளியே விழுந்தது. |

| A7 | வாக்கியம் அமைத்தல் |
|---|---|
| Q31 | முயல் சிங்கத்தைப் பார்த்துப் பயந்தது. |
| Q32 | விமல் தன் நண்பனைத் துரத்தினான். |
| Q33 | ஒட்டகச்சிவிங்கி உயரமாக இருக்கும். |
| Q34 | கிளி மிகவும் அழகான பறவை ஆகும். |
| Q35 | சுமதி தன் செல்லப் பிராணியை அன்பாக வளர்த்தாள். |